# உபஹார வாடிக்கையாளர்களுக்கு மற்றுமொரு வெகுமானம்
# செனெஹஸே உபஹார

புரட்சிகரமான உபஹார பக்கேஜைக் கொண்டுள்ள வாடிக்கையாளர்களும், உபஹார பக்கேஜைப் பெற்றுக் கொள்ளவுள்ள வாடிக்கையாளர்களும் "செனெஹஸே" உபஹார எனும் 5 உப இணைப்புக்களையும், விசேட விலையில் அதிதுரித இணையத் தொடர்பு பக்கேஜையும் பெற்றுக் கொள்ளலாம் என இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனமும், தேசிய கையடக்கத் தொலைபேசி சேவை வழங்குனரான மொபிடெலும் அறிவித்துள்ளன.

இந்த புதிய சலுகையின் மூலம் "செனெஹஸே" உபஹார குழுவிற்குள் அடங்கும் உறுப்பினர்கள் குறைந்த கட்டணத்தில் அழைப்புக்களை மேற்கொள்வதுடன் அதிதுரித மொபைல் இணையத் தொடர்பினையும் பெற்றுக் கொள்ளலாம். அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் 2009ஆம் ஆண்டு தேசிய தகவல் தொழில்நுட்ப மற்றும் ஆங்கில மொழி ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டதற்கமையவே இந்த புதிய அறிமுகம் இடம்பெறுகிறது. நாடெங்கிலுமுள்ள மொபிடெல் உபஹார வாடிக்கையாளர்கள் அதிதுரித இணையச் சேவையினைப் பயன்படுத்தி E-பிரஜைகளாவதை ஊக்குவிப்பதற்காகவே மொபிடெல் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

சமாதானம் மற்றும் அபிவிருத்தியைக் கொண்ட இக்காலகட்டத்தில் மொபிடெல் நாட்டின் அனைத்து பாகங்களிலும் தனது சேவையை விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்து வருவதுடன் இப்புதிய "செனெஹஸே" உபஹார பக்கேஜானது நாடெங்கிலும் வாழும் உபஹார வாடிக்கையாளர்களுக்கு தமது உறவினர்களுடனும் நண்பர்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்த வழிவகுக்கிறது.

கடந்தாண்டு உபஹார பக்கேஜை அறிமுகப்படுத்தி வைத்த வர்த்தக, சந்தை அபிவிருத்தி, கூட்டுறவு, பாவனையாளர் விவகார கௌரவ அமைச்சர் பந்துல குணவர்த்தன அவர்கள் புதிய பக்கேஜ் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், இப்புதிய "செனெஹஸே" உபஹார பக்கேஜின் நலன்களை அரசதுறை ஊழியர்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வார்கள் என தான் நம்புவதாகவும், தேசிய அமைப்புகளான இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனமும் மொபிடெல்லும் மீண்டும் கூட்டிணைந்து அரச துறையினர், ஓய்வூதியதாரர்கள் மற்றும் மதகுருமாருக்கு பல நன்மைகளைக் கொண்ட இந்த பக்கேஜை வடிவமைக்க பாடுபட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா டெலிகொம் மொபிடெலின் தலைவி திருமதி. லேஷா டி சில்வா சந்திரசேன புதிய செனெஹஸே உபஹார பக்கேஜ் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், உபஹார வாடிக்கையாளர்கள் வழங்கிய ஆதரவிற்கு நன்றி தெரிவிக்குமுகமாக இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்துடன் இணைந்து மொபிடெல், உபஹார வாடிக்கையாளர்களுக்கு மேலும் நலன்களை வழங்க முன்வந்துள்ளதாக தெரிவித்தார். அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாண்டை தேசிய தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில மொழி ஆண்டாகப் பிரகடனப்படுத்தியதற்கமைய நாங்கள் அனைத்து உபஹார வாடிக்கையாளர்களுக்கும் குறைந்த கட்டணத்தில் இணையத் தொடர்புகளை வழங்கவுள்ளோம் எனக் குறிப்பிட்டார்.

இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம், அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது எனக் குறிப்பிட்ட இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்தின் தலைவர் திரு. பிரதீப் குணவர்த்தன, இந்த பக்கேஜின் ஊடாக அவர்கள் குறைந்த கட்டணத்தில் தமது குடும்பத்தினருடன் தொடர்புகளை ஏற்படுத்த முடிவதுடன் தேசிய கையடக்கத் தொலைபேசி சேவை வழங்குனரான மொபிடெலுடன் இணைந்தே இதனை மேற்கொள்ள முடிந்தது எனவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்வான மஹிந்த சிந்தனையின் கீழ் 2008ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புரட்சிகர உபஹார பிற்கொடுப்பனவு பக்கேஜின் மீதே இந்தப் புதிய "செனெஹசே" உபஹார பக்கேஜ் வடிவமைக்கப்பட்டுள்ளது. நாடெங்கிலுமுள்ள அரச சேவையாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் மாதாந்த செலவைக் குறைத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் உபஹார பக்கேஜின் முக்கிய நோக்கத்திற்கு இந்த "செனெஹசே" உபஹார மேலும் வலுச்சேர்க்கும்.

செனெஹசே உபஹார பக்கேஜின் முக்கிய அம்சங்கள்

- மொபிடெல் வலையமைப்பினுள் 50 நிமிட இலவச வீடியோ அழைப்புகள்
- செனெஹசே குழுவினுள் வெளிச்செல்லும் குரல்/வீடியோ அழைப்புகள் 50 சதம், SMS 25 சதம்
- ஏனைய மொபிடெல் இலக்கங்களுக்கு வெளிச்செல்லும் குரல்/வீடியோ அழைப்புகள் நிமிடத்திற்கு 1 ரூபா, SMS ஒன்றிற்கு 75 சதம்
- ஏனைய உள்நாட்டு வலையமைப்புகளுக்கு குரல்/வீடியோ அழைப்புகள் நிமிடத்திற்கு 3 ரூபா, SMS ஒன்றிற்கு 1 ரூபா
- மாதாந்தக் கட்டணம் ஒரு இணைப்பிற்கு 50 ரூபா
- 240 ரூபா மாதாந்தக் கட்டணத்துடன் 1 mbps uplink/down link வேகம், 1GB வரையான தரவுத் தரையிறக்க வசதி கொண்ட 3.5 அதிவேக இணையத் தொடர்பு.

*அனைத்துக் கட்டணங்களும் அரசவரிகள் மற்றும் தீர்வைகளுக்கு உற்பட்டது

TRC/M/09/003 (P)